# THE MORNING STAR.

Vol. 57. Jaffna, Thursday 18th of March., 1897. No. 6.

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

*ERCEIPTS FOR THE MORNING STAR.*

'97

| | | |
|---|---|---|
| Colombo | Messrs. S. Vyramuttoo and A. C. Davasagayam | 4.00 |
| Chundicully | Rev. J. Carter | 1.50 |

THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The Company's Steamer "Lady Havelock" is appointed to sail from Kangesanturai for Colombo on the following date.

Via Paumben 26th March.

W. MATHER & SON.
*Agents.*

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

OFFICE BANK HALL, SEA STREET, JAFFNA.

The company opens current accounts with sums of not less than Rs 100 and allows interest at 2°/$_{0}$ per annum on minimum monthly balances of Rs. 500, and upwards.

Fixed deposits received on the following terms:—
For 12 months interest at 6°/$_{0}$ per annum allowed
" 6 " " 5 " "
" 3 " " 3 " "

Approved bills discounted. Money advanced on pledges.

Remittances made to and from Colombo.
Colombo Bankers. National Bank of India Ltd.

Cheques and foreign drafts and bills of exchange on the Colombo Banks cashed.

Inland and foreign goods imported on Commission.

Office hours from 10-30 A. M. to 4 P. M.

WM. MATHER.
*Managing Director.*

FOR SALE.

GENTLEMEN'S, LADIES', AND CHILDREN'S BOOTS AND SHOES

also Harness, Curry Combs, Brushes. Knee Caps, Driving whips, Spare reins, Bits, Horse cloths, Dubbing, Elleman's embrocation, &c.

WATERBURY WATCHES

The "Trump" Gentleman's size Rs. 8 00
Ladies' size - - - - " 12.00

*ALL AT COLOMBO PRICES*
at the Store department of

The Jaffna Commercial Corporation Ltd.

FOR SALE.

BRILLIANTS!! BRILLIANTS!!

Calicut Tiles—first quality.
Calicut Flooring bricks.

Wm. Mather & Son.

READY FOR SALE.

GEOGRAPHY OF ASIA, Tamil.

FOR THE V. STANDARD,

*Third Edition. Revised and Enlarged.*

ஐந்தாந் தரப் பூமிசாத்திரம்.



Apply to A. Canagasabhapilly
Oodooville, Jaffna.

AUCTION SALE.

I am instructed by H. H. Cameron Esq. District Judge, Jaffna, To SELL at his residence at the Fort all his HOUSEHOLD FURNITURE on Saturday the 27th March 1897.

Catalogues in due Course.

J. R. TOUSSAINT.
Auctioneer.

FISCAL'S SALE.

Fiscal's Office Batticaloa 25th Feb. 1897.

In the District Court of Batticaloa.
No. 1698
Sadiyar Mayilton Plaintiff
Vs.
Tewanaipullai widow of Sinnatampipoddy Defendant.

Notice is hereby given that on the undermentioned dates and at the times indicated below respectively, will be sold by public auction at the spot the following property of the Defendant for the recovery of the judgment of the Court abovenamed dated 25th August 1896 for Rs. 400 with legal interest thereon at 9 p. c. per annum from 15th July 1896 till payment and cost of this action Rs. 85.75 cts only.

On 27th March 1897 at 3 p. m.

A paddy land called Kurukkuvaiyel at Sevukappattu Division in Sammanturaipattu bounded on the North by Karachai waiyel and Pootharasy Elevisem. South by Puthu Velly, East by Kallady Elevisem and West by Vadechel waical. In extent N to S, E side 20 fms. in the middle 44 fms. W. side 48 fms and E to W 234 fms with all water rights.

On 27th March 1897 at 3 p. m.

2. A paddy land called Pootharasy Elevisem at Panditivoe Kandem in Sammanturai Pattu bounded on the North by Kottan Pattu South by Kurukku Vaiyel East by Naddukallady, Velly Mullai Keran Vaiyel and West by Karachi Waiyel and Kurakkuvaiyel in extent North to South 110 fms and East to West, N side 42 fms and S side 50 fms with all water rights.

On the 26th March 1897 at 9 a. m.

3. Two pieces of paddy land forming into one block called Pariya Palle velly Muttaddu and Palaiya Mullaikkaren waiyel at Meddavelly in Panditivoe Kandem in Sammanturai pattu bounded on the North by Pariya Mullai waiyal South by Muttaddoe East by Parattu Kadduvarampu and West by Palla Eluvan pattu Pothu. In extent 12 acres with all water rights.

and on 26th March 1897 at 4 p. m.

4. A garden called Sinnevalevu at Sammanturai bounded on the North by Waical South by Garden of Ethirmanasingha Wanniah East by Garden of Paiveddippooy's widow Candammai and West by Garden of Chelliah. In extent N to S 17 fms with plantations.

K. C. KADIRGAMAR,
Deputy, Fiscal.

ORDER NISI.

IN THE DISTRICT COURT OF JAFFNA.

Testamentary Jurisdiction } No. 827

In the matter of the estate of the late Alexander Mearns of Edinburgh in Scotland Deceased.

William Moir Summerfield Twynam of Pallai Petitioner

This matter of the Petition of William Moir Summerfield Twynam of Pallai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Alexander Mearns of Edinburgh, Scotland coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge, on the 4th day of March 1897 in the presence of Mr. Tambiah S. Cooke Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 1st day of March 1897 having been read it is declared that the Petitioner is the next of kin of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless any person shall on or before the 7th day of April 1897 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 4th day of January 1897.

H. H. CAMERON,
District Judge.

## Local & General.

**Weather**. The dew has abated, and the heat in the day time is unbearable. There is only a very slight sea breeze which, towards the evenings, is much relished. There was a slight shower of rain on Sunday last, more of which will be very welcome at this time of the year.

**Medical**, Dr A. Evarts has been transferred to Kaits and he assumed duties last week. *Dhonies* from the Indian coast call at this port more frequently now than at other times. Much alarm has been caused by the panic of the bubonic plague, and we surmise that Dr. Evarts, who is an efficient officer, has been posted there to land with caution passengers from the coast.

**Manippai Post Office**. We are glad to notify the appointment of Mr. J. Backus who had been for a long time Postmaster at Kaits and gained golden opinions from all classes of people there, as the permanent Postmaster of the Post Office in the place of the late much lamented Mr. S. Chelliah. We hope he would continue to give satisfaction to all equally. *Com.*

**The Supreme Court** The trial on the 4th inst. of the three prisoners in case No. 8. was concluded on that day ending in an acquital. On Friday the 5th inst. case No. 5 was taken up in which eleven young fellows of Vannarponne were charged with rioting armed with deadly weapons It transpired in evidence that these young men had for their common object to molest a party of goldsmiths who had arranged a marriage procession with torch lights, music and carriages. The prisoners were defended by Advocates Allagakoen and Kanagasabai, and they narrowly escaped a conviction. On Monday the 8th inst. a District Court criminal appeal was fixed for argument. But the argument did not come on as the notices on the accused were not served. The Chief Justice availed himself of the leisure time on Monday to visit the Police Court where Mr. Tampoo was on duty. He watched the proceedings both in the "chambers" and on the "Bench" for nearly three hours.

The sensational case of the present sessions, case No. 9, the Chankuvali robbery case was taken up on the 9th inst. The Court was crowded with visitors. The prisoners seven in number were put in the dock. The 5th. prisoner whose charge was distinct from the rest was removed from the dock for a separate trial. Six stood the trial and the special jury assigned for their trial was impanelled. Messrs. Grant, Lembruggen, J. P. Todd, M. Vytialingam of Batticotta, S. Muttuchami, of Puttoor, Bastiampillai Modr., Swampillai, and Manuelpillai Rajakaria of Jaffna Town with Mr. H. Todd who was the foreman. The Crown Counsel was assisted in the prosecution by the Police Magistrate Mr. Tampoo and Messrs Casippillai and Carpenter Proctors whilst the prisoners were defended by Messrs. Kanagasapai and Visuvalingam for the 3rd, 4th, 5th, and 6th accused and Mr. Allegakoen for the 1st and 2nd accused. The details of the charges were clearly laid before the jury by the prosecuting counsel. The examination of the witnesses lasted for three days. The facts of which the public were aware, were borne out by the testimony of the female inmates of the house which was robbed supported by the testimony of a few other witnesses. The evidence on the whole created any impression of conviction which the counsel for the defence ably attempted to remove but this was without and appreciable benefit. The jury returned a verdict of guilty against the Ist, 2nd, 3rd, and 6th prisoners—the 1st, 2nd, and 6th for house tresspass, robbery and hurt and the 3rd for robbery and hurt. The concluding portion of the proceedings was done by lamp light. The 1, 2, and 6 accused were each sentenced to seven years rigorous imprisonment and the 3rd to 6 years rigorous imprisonment and to a fine of Rs. 200 of which Rs. 100 is to be paid to the complainant's niece by way of compensation. On Friday the 12th inst. the prisoner in the Chank[illegible] case who was reserved for a separate trial was put [illegible] dock with the charge of the possession of stolen [illegible] he was found guilty, but the sentence was reserved for the next day the judge promising indulgence in the sentence in the event of his disclosing all the facts connected with the said robbery. A case of abduction from Vannarponne which was added to the roll during the sessions, was taken up last. The prisoners, father and son, were represented by Ad. Kanagasapai. The jury found them guilty and they were let out on trial for good behavior for six months. The accused on the Chankuvali case who was found guilty of the possession of stolen goods was sentenced to undergo rigorous imprisonment for a period of six months. The complainant in the abduction case was fined Rs 25 for pervarication. *Com.*

**Personal**. Rev. T. S. Smith and family are leaving this week for the hills in South India. Mr. Smith expects to be back in a month leaving his family at Kodaikanal for some time longer. Misses Howland and Meyers have gone to Colombo for a few days.

**Tillipally Training School**, Rev, Samuel Veerakutty has been called to the headmastership of the Tillipally Training School made vacant by the death of Mr. S. Jeremiah. Mr. Veerakutty is a graduate of the Training School and also of the first Theological class in English taken by the mission. He has had several years of experience both as a teacher and a pastor, and we wish him all success in his new position. The new year of this school will open soon after the middle of April by which time Mr. Smith will be back.

**Jaffna College**. The term closed last week and the new term will open about May Ist. Mr. Best having completed his term of service, has left for home. He sailed from Colombo on the S. S. Oruba on the 16th inst. His successor has already been appointed, and will be here in the course of a few months. He is a Mr. Frost, B.A. but from what College we have not yet learned.

**Misses Leitch**. These young ladies are interesting themselves now in collecting money for the Indian Famine Relief. They are also still collecting for the Armenian sufferers. It is reported that they are not likely to return to Ceylon for the present being too busy to leave the home land.

**The S. S. Lady Gordon**. This Island Steamer of Walker Sons & Co. seems ill-fated, Only just released from strict quarantine for ten days outside the Colombo harbour, she has stuck in the sand near Batticaloa. Several attempts have been made to pull her off, but without avail. The S. S. Lady Havelock and another steamboat the "Bonaventure" were employed for the purpose. All attempts proving of no avail, the "Lady Havelock" carried the passengers and cargo of the stranded vessel to Colombo.

**Railway**. The Surveyor General, we are told, has arrived at Jaffna, to inspect the railway survey already made by Mr. Maine. Some portions of the traced line between Kankasanturai and Jaffna, are, we understand, being cleared. *Com.*

# உ த ய தா ர கை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௫௭ ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௧௮௯௭ ம் ௵ பங்குனி ௴ ௧௮ ௳ வியாழக்கிழமை. [சங்கியை, ௯


## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனி (லிமிற்றெட்)



இந்தக் கொம்பனியாரின் "லேடிஅவலக்" என்னுங் கப்பல் பங்குனி ௴ 23 ௳ செவ்வாய்க்கிழமை பின்னேரம் காங்கேசன்றுறையிலிருந்து பாம்பன்வழியாகக் கொழும்புக்குப்போக இருக்கின்றது.

W M Mather, & Son. Agents.

### விளம்பரம்.

வட்டுமேற்குக்குடி நாகநாதர் ஆறுமுகமாகிய நான் இத்தாற் சகலருக்கும் அறிவிப்பது: வட்டுக்கிழக்கிறை இலந்தைப்புலோ பர. நிலம் இலா. ஐந்து. குளி பதின்மூன்றரையே அரைக்கால். எல்லை கிழ. முருகர் தெய்வானையும், முருகேசர் வயித்திலிங்கமும், வட. ஒழுங்கை, மேற். வேலுப்பிள்ளை கைம்பெண் யோட்சியனும் சின்னத்தம்பி கைம்பெண் தெய்வானைப்பிள்ளையும், தெற். அமரிக்கன் மிசியோன். இந்த எல்லைகளுக்குள்ளான காணியை ௧௮௭௪ ம் ௵ தை ௴ ௩௦ ௳ நான் அறுதிகொண்டு ஆட்சிபண்ணி, பின் சில நியாயத்தையிட்டு ௧௮௭௫ ம் ௵ ஆனி ௴ ௭ ௳ வட்டுமேற்குக்குடி வயிரவநாதர் நமசிவாயம்பேரில் நம்பிக்கைக்கு எழுதிவைத்திருக்கிறேன். அதன் உறுதிகளும் ஆட்சியும் இந்நாள்வரைக்கும் என்னுடனேயே யிருக்கிறது. இப்படிக்கு, நா. ஆறுமுகம்.

### விளம்பரம்.

மானிப்பாய்குடி Dr. C. T. Mills அல்லது முருகேசர் எதிர்நாயகமாகியநான் சகலருக்குமறிவிப்பது யாதெனில், வட்டுமேற்கிலிருந்து காலஞ்சென்றுபோன வயிரவநாதர் சின்னத்தம்பியுடைய வளவுக்குக் கிழக்குப்புறமாகவிருக்கும் வட்டுக்கிழக்கு இறையிலுள்ள "இலந்தைப்புலமும், ஆளியகாடும்" என்கிறகாணி பர. நிலம். இலா. ௬௨. எல்லை வடக்கு ஒழுங்கை கிழக்கு முருகர் தெய்வானையும் முருகேசர் வயித்திலிங்கமும். தெற்கு அமரிக்கன் மிஷியோன். மேற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் யோட்ஷயானும் சின்னத்தம்பி கைம்பெண் தெய்வானைப்பிள்ளையும்.

இந்தக்காணி ௧௮௭௮ ம் ௵ துவக்கம் என்னுடையதாயிருக்கிறது சிலதகுந்தநியாயத்துக்காக இதின் அறுதியுறுதி நம்பிக்கையின்பேரில் முதல்வட்டுமேற்குக்குடி நாகநாதர் ஆறுமுகத்தின்பேரிலும், மறுபடி வட்டுமேற்குக்குடி காலஞ்சென்றுபோன வயிரவநாதர் நவசிவாயத்தின்பேரிலும் முடித்திருக்கிறேன். இப்போ குறித்த என்னுடையகாணியைப்பற்றி வியாச்சியமிருக்கிறபடியால் யாதொருவரும் இக்காணியை பற்றி, ஈடு. அறுதி, நன்கொடை, உபசம், முதலியன யாதொன்றும் செய்யவும் செய்விக்கவும்படாதென்றும் விசேஷமாக எந்தப்பிரசித்த நொத்தாரிசும் இக்காணியைப்பற்றி எவ்வித உறுதியாவது சாதனமாவது எழுதப்படாதென்றும் இத்தால் வெளிப்படுத்தி விளம்பரம் பண்ணுகிறேன். C. T. Mills.

### புத்தக விளம்பரம்.

உபவித்தியாதரிசி Mr. G. C. Thampapillai என்பவரால் இயற்றப்பட்ட ௧ ம், ௨ ம், ௩ ம், ௫ ம் தரக் கணிதங்களும் இலங்கைப் பூமிசாஸ்திரமும்; வித்தியாதரிசி Mr. A. Van Cuylenburg என்பவரால் செய்யப்பட்ட ௪ ம் தரக் கணிதமும் கிரயத்துக்கு வாங்கப் பிரியமுள்ளவர்கள் வட்டுக்கோட்டை மிசியோன் வீட்டில் Mr. M. Buell இடம பெற்றுக்கொள்ளலாம். V. P. Post வழியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

Batticotta, Octobor, 1 st 1896.

### புத்தக விளம்பரம்.

காலஞ்சென்ற எமது தந்தையாராகிய மேஸ். ஜே. ஆர். ஆணல்ட் ஆசிரியராலியற்றப்பட்ட பின்னுல் வரும் புஸ்தகங்களை வாங்க விரும்புவோர் எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

| | | விலை, ரூபா. | சதம் |
|---|---|---|---|
| 1 | திருச்சதகம் | 0 | 15 |
| 2 | வெல்லையந்தாதி | 0 | 10 |
| 3 | கதாசங்கிரகம் | 1 | 12 |
| 4 | கீர்த்தனசங்கிரகம் | 0 | 25 |
| 5 | இல்லறநொண்டி | 0 | 30 |
| 6 | பாவலர் சரித்திர தீபகம் | 1 | 50 |
| 7 | குடும்பதருப்பணம் | 0 | 50 |

தபாற்செலவு முறையே, சதம் 2-2-5-2-2-10-2

S. T. Arnold.


உதயதாரகை ௧௮௯௭ ௵ பங்குனி ௴ ௧௮ ௳.

## ஏக விருத்த பாரத ராமாயண பாகவதம், விநோத சித்திர வினுவுத்தரக் கவிகள்.

"மானிப்பாய் மேஸ். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் கேள்விப்படி, சுன்னாகம், மேஸ். அ. குமாரசாமிப்பிள்ளையவர்கள் மொழிபெயர்த்தியற்றிய, ஏகவிருத்த பாரதம், ஏகவிருத்த ராமாயணம்; ஏகவிருத்த பாகவதம், ராவணன் செய்த சிவத்தோத்திரம். விநோத சித்திர வினுவுத்தரக்கவிகள்" பெற்றோம். ஆரியத்தினின்று மொழிபெயர்க்கப்பட்ட ஏகவிருத்தங்கள் தோத்திரங்களும், சித்திரக்கவிகளாம வியஸ்த சமஸ்தசாதி, அட்டதளபதுமபந்தமாதியனவும் வாசிக்க வாசிக்க இன்பம்பயப்பன. பாக்களின் கோவை பொருளாதியன மிகச் சிறந்தன. விலை சதம் ௩ மாத்திரம். மேஸ். குமாரசாமிப்பிள்ளையவர்களின் கல்வித்திறன், புலமைத்திறன், தமிழ்ப்பாஷாபிமானிகளுட் பிரசித்தியான காரியமாதலின் யாமேதுங்கூறலவசியமன்றும். அனுப்பியபிரதிக்காய் வந்தனங் கூறுகின்றோம்.

சீவியம் சுகமுள்ளதா?—Is Life worth Living.- தன் சீவிய ஓட்டத்திலோராண்டைக் கழித்துப் பின்னும் ஓராண்டி னோட்டத்தை யாரம்பித்துக் குதூகலங்கொள்ளும் மனுடன் சற்றே தரித்து உலகசீவியம் விரும்பப்படத்தக்கதா என்னுங் கேள்விக்கு விடைதேர்ந்துணர்வது நலமாயிருக்குமன்றோ? சின்னுட் பலபிணிச் சிற்றறிவினராம் மனுஷரிவ்வுலகத்திற் றப்பிஒட்டிச் சீவித்துக்கொள்வதற்காய்ப் படும் பிரயாசங்கட்களவில்லை. நெற்றிவேர்வை நிலத்தில் விழக் கஷ்டப்பட்டு நிலத்தைக் கிண்டிச் சீவியஞ்செய்வார் ஒருசார், காடுமலை கடந்தும் திரைகடலேறியும் திரவியந்தேடியோடுவார் ஒருசார், பொய்யைச் சொல்லிப் புழுகைக் கூறி முகஸ்துதிபேசி, யிரந்து வயிறுவளர்ப்பாரொருசார். பிறரை வருத்தி யவர்பொருள் கவர்ந்து தம் பெண்டுபிள்ளைகளோடு உல்லாச சம்பிரம வாழ்க்கை நடத்துவாரொருசார், அறிவு சம்பாதித்தலே கௌரவமெனக்கொண்டு இராப்பகலாய்க் கண் பூஞ்சலாடப் புத்தகங்களோடு தம் சீவியத்தைக் கழிப்பாரொருசார். இவர்களொருபாலிருக்கப் பின்னுேர்சாரார் உலகசீவிய தொல்லைகளைச் சகிக்கலாற்றுதாராய்த் தற்கொலைபுரிந்து தம் வாணுளுக்கு முடிவுகட்டுகின்றனர்.

"சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலனென்ன" என்னுங் கேள்விக்கு உலகஞானிகளிடத்தில் விடையாராயுமிடத்து ஒரு பக்கத்தில் சர்வானுகூல மதவாதிகள் (Optimists) எல்லாம் நன்மை, எல்லாம் சுகம் எல்லாம் இன்பம், என்க அவர்க்கு மறுதலையாய் சர்வபிரதிகூலமதவாதிகள் (Pessimists) எல்லாம் பாவம் எல்லாம் துன்பம் எல்லாங் கவலை உலகசீவியத்திற் றுக்கமொழியச் சுகமொன்றுமில்லையென்கிறுர்கள். செல்வத்திலே நன்மையில்லையா வென்றாலோ அதுவே சகல தீமைக்கும் ஓயாக் கவலைக்குக் காரணமென்கிறுர்கள். படிப்பு முயற்சி யெப்படியென்றால் அது உடலுக்கிளைப்பு என்கிறுர்கள். அறிவு விரும்பப்படத்தக்கதன்றோவெனின் அதுமனதுக்குச் சஞ்சலங்கொடுப்பதென்றும் அறிவுபெருத்தவன் நோவுபெருத்தவன் என்றுங் கூறுகின்றனர். இல்லாச்சிரமமுறை அரசாட்சிமுறை சனசங்கவேற்பாடுகளெல்லாந் தஞ்சணமே அழிக்கப்படல் வேண்டுமெனக் கங்கணங்கட்டிநிற்பார் சிலர். சரீரமோ சகல பாவக் குடுக்கையாம் மலபாண்டமென்றும் மனமோ வஞ்சனை பொறாமை லோபம் வைத்த கிருமியென்றுங் கூறிச் சரீரத்தை வாட்டி உலகத்துக்கொளித்தோடி வனசஞ்சாரஞ் செய்வார் சிலர். கன்மேந்திரியங்கள் ஞானேந்திரியங்களை யொடுக்கி மனமென்பதை முற்றும் அழித்தப்போடுவதே முத்தியென்பார் புத்தனுதியோகஞானிகள்.

ஓ! மனுஷனே! உன்னுடைய அனுபவமென்ன? உனது சீவிய மெப்படியிருக்கின்றது? துக்கமா? சுகமா? பைறன் (Byron), கொலரிச் (Coleridge)என்னும் அங்கிலேயபுலவர்களுக்கு உலகம் உயிரற்றதும் துன்பம் நிறைந்ததுமாயிருக்க, மில்ற்றன் (Milton), ஷெல்லி (Shelly), உவேட்ஸவோத் (Wordsworth), தெனனிசன் (Tennyson) புலவர்களுக்கோ உலகம் தேவமகிமைப்பிரசன்னமாயும், தாபர சங்கம வஸ்துக்கள்யாவும் தேவஞானத்தையும்தேவஅன்பையும் விளக்குவனவாயுமிருக்கின்றன. தேவனில்லையென்பவனுக்கும் தேவபக்தியற்றவனுக்கும் உலக சீவியம் எல்லாங் கவலையும் நிர்ப்பாக்கியமுந்தான். தேவனை நம்பி அவரது அன்பின் கரத்தின் கீழிருப்பவனுக்கோ எல்லாம் இன்பமும் எல்லாம் ஆனந்தபாக்கியமுமாயிருக்கும். ஞானிகள் சிரேட்டரொருவர், சகல இன்பங்களையும் விரும்பியபடியெல்லாமநுபவித்துக் கடைசியில் உலகசீவியத்தினெல்லாப்பாகங்களையுமாராய்வுசெய்து முடிவுரையாய் 'காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக. தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர்மேலும்விழுந்தகடமையிதுவேயென்கிறுர். அளவில்லா இரக்கமும் அன்பும் நிறைந்ததேவனேடுறவாடி உன் கவலைகளையெல்லாம் அவர்மேற் சுமத்திவிட்டு உனக்கென்று அவர் நியமித்த கடமையை அவர் மகிமைக்காக மனத்திருத்தியோடு பார்த்துவருகிறுயா? அப்படியாயின் உன் சீவியம் சுகானந்த சீவியந்தான். சர்வவல்லமை, சர்வஞானம், மாறுமை, நீதி, இரக்கம், அன்பு நிறைந்த பிதாவின் சமுகத்திற் சீவிப்பது எத்தனை பாக்கியம். உன் பலவீனங்களிலுன்னைத் தாங்குமோர் இரட்சகரையுடையவனாயிருப்பது எத்தனையின்பம். உன் உபத்திரவங்களில் உன்னைத் தேற்றுமோர் தேற்றரவாளனை வைத்திருப்பது எத்தனை மகிழ்ச்சி.

சுகமென்பது, செல்வம், கல்வி,கீர்த்தி, இராசஉத்தியோக மகிமைகளிற் றங்கியிருக்கவில்லை. சிலகாலங்களின் முன் அமரிக்காவிற் சீவித்திறந்துபோன வோர் திரவியசாலியைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய். அவன் சீவித்தது அழுக்குப்பிடித்த வோர் சிறுஅறையிலாம். தின்றது அங்கிங்கு பொறுக்கியெடுத்த அப்பத் துண்டுகளாம். அணிந்தது கந்தைத் துணிகளாம். இறந்தது பசியினுலாம். ஆனுற் பின்வைத்துப் போனதோ ஒன்றரை இலட்சமாம். இவனது சீவியம் முழுவதும் நிர்ப்பாக்கியமாகவேயிருந்தது. திரவியமிருந்துஞ் சுகமிருந்திலது. அவனுக்குப் பக்கத்திலேயுள்ள வோர் சிறுகுடிசையிலோர் ஏழைக் கைம்பெண் சீவித்தாள். அவள் தன்கையினுல் வேலைசெய்து தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் ஆகாரத்தைச் சம்பாதித்தாள்.அவள் குடிசையிலிருந்துஎப்பொழுதும் இன்பகீதங்களுஞ்சேபங்களுங் கேட்டன. அவள்முகம் எப்பொழுதுஞ் செந்தளிப்பாயிருந்தது. மரிக்கும்பொழுதுஞ் சந்தோஷத்துடன் மரித்தாள். இவள் வறியவளாயினுஞ் சந்தோஷசீவியம் நடத்தினள். நீ உத்தியோகஸ்தனுயினென், கமக்காரனுயினென், வர்த்தகனுயினென், கைத்தொழிலாளியாயினென், அரசனுயினென், பிரசையாயினென், உன்பொருளையும் செல்வாக்கையும், உன் சரீரத்தையும் மனத்தையும் எல்லாவற்றையுந் தேவனுக்கென்று நேர்ந்துவிட்டு அவர் மகிமையை நாடி அன்பின்சீவியத்தை நடத்து. கடைசியில் நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன் இதுமுதல் நீதியின்கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது என ஆனந்த வார்த்தைகள் கூறி நித்திய பேரின்பவாழ்விற் பிரவேசிப்பாய்.

## யாழ்ப்பாணம்.

காலநிலை.—Weather.—மாதம் பங்குனியாகையால் வெயிலகோரமாயெறிக்கின்றது. பனி குறைவு. புழுக்கமதிகம். காய்ச்சலாதிய நோய்களுங் குறையத்துவங்குகின்றன.

சுப்பிரீங்கோடு.—Supreme Court.—மூன்றுந்திகதி புதன்கிழமை அரசாட்சிப்பெருநாளாக இரண்டாந்திகதி விளக்கம் துவங்கியிருந்த வீடுடைத்துக் களவெடுத்தலென்னுஞ் சாவகச்சேரி வழக்கு வியாழக்கிழமை முடிவுசெய்யப்பட்டது. எதிரிகள் சரவணமுத்தாதிய மூவர். அப்புக்காத்து அளகைக்கோன் எதிரிகளுக்காய்த்தோற்றினர் மேஸ. கிறுன்ற் என்பவரைத் தலைமையாய்க்கொண்ட யூரிமார் எதிரிகள் நிரபராதிகளெனத் தீர்த்தனர்.

ஐந்தாந்திகதி வெள்ளிக்கிழமை வண்ணர்பண்ணையிற் கூட்டங்கூடிக் கலகஞ்செய்தலென்னும் விசேஷவழக்கு விளக்கமாரம்பமாயது. எதிரிகள்பதினுெருவர். அப்புக்காத்துமார் அளகைக்கோனும் கனகசபையும் எதிரிகளுக்காய்த் தோற்றினர். மேஸ. கிறுன்ற் தலைமையாய இங்கிலிஷ்யூரிமார் எதிரிகள் நிரபராதிகளெனத் தீர்த்தனர்.

எட்டாந்திகதி திங்கட்கிழமை சுப்பிரீங்கோட்டுச் சிரேட்டநீதாசனர் சேர் பொன்சரவர்கள் பொலிஸ்கோடு சென்று நீதவான் தம்பு அவர்களின சீரிய நியாயவிசாரணை பார்த்துத் திருத்தியடைந்தனர்.

பாரப்படுத்தப்பட்ட வழக்குகளுட் பெரும் வழக்காகிய சங்குவேலிக் களவுவழக்கு ஒன்பதாந்தேதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூன்றுநாட்களாய்விளங்கப்பட்டது. எதிரிகள் எழுவரில் ஆறுபேர் வீடுடைத்தல், களவாடல், களவாடப்பட்டதென்னுங் குற்றச்சாட்டுகளுக்கும், ஒருவர் களவுப்பொருள் வைத்திருத்தலென்னுங் குற்றச்சாட்டுக்கு மிடமாயினர். முந்திய ஆறுபேரின் குற்றச்சாட்டுகள் முதல் விளங்கப்பட்டன. மேஸ. ஜே. பி தொட். லீம்பிறக்கன். ஏச் பி தொட், கிறுன்ற். வஸ்தியாம்பிள்ளை முதலியார், ராசநாரியர், சுவாம்பிள்ளை, முத்துச்சாமி, வயித்திலிங்கமென்னும் விசேஷ இங்கிலிஷ யூரிமார் தெரியப்பட, மேஸ். ஜே. பி. தொட் தலைமையாயினர். அப்புக்காத்துமார் அளகைக்கோனும் கனகசபையும் எதிரிகளுக்காய்த் தோற்றினர். யூரிமார், வியாழக்கிழமை சாயந்தரம் ஏழரை மணிவரையில், ௧ ம், ௨ ம், ௫ ம் எதிரிகளை மூன்று குற்றச்சாட்டுகளுக்கும், ௩ ம் எதிரியை [illegible] இருகுற்றச்சாட்டுகளுக்குமுள்ளாக்கி எஞ்சிய இருவரையும் விடுதலை செய்தனர். மூவரிலொவ்வொருவர்க்கு ஏழுவருஷக் கடூழிய மறியலும் மற்றவர்க்கு ஆறுவருஷ மறியலோடு ௨௰ ரூபாய் குற்றமும் விதிக்கப்பட்டது. குற்றத்தண்டம் சிறைக்காளிகளுக்காய்த் தீர்க்கப்பட்டது.

பன்னிரண்டாந்திகதி வெள்ளிக்கிழமை களவுபொருள் வைத்திருந்த ஆரும்எதிரி விளங்கப்பட்டு ஆறுமாத மறியற்றீர்ப்புப் பெற்றனன். அந்தநாள் ஸ்திரீசோரமென்னும் வழக்கு விளங்கப்பட்டது எதிரி ஆறுமாத நன்னடைபிணையில் விடப்பட, சாட்சியிற் றவறுபேசிய ஒழுக்களிக்கு ௨௫ ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இம்முறைச் சுப்பிரீங்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்த வழக்குகள் ஒன்பதாயினும் விளக்கம் மூன்று கிழமைவரையில் நீடித்தது. குற்றச்சாட்டுகளின் மெய்பொய்யைச் சரியாய் நிதானிப்பதற்கு இருபக்கச் சாட்சிகளையும் பூரணமாய் விசாரணைசெய்தலவசியமாதலின் விளக்கம் நீடித்ததெனக் குறைகூற விடமின்றும். இரண்டுமூன்றுநாட்களாய் நீடித்த விளக்கங்களில் வழமைபோல யூரிமாரைப் பூட்டிவையாது வீட்டுக்கனுப்பிப் பின் அழைத்தது தவறென்றுர் சிலர். சோதனைக்கிடங்கொடுப்பது மனுஷசுபாவமாயினும் அறிவும் சீர்திருத்தமும் விளங்குமிக்காலத்தில் யூரித்துரைமக்களைப்பற்றிஅவநம்பிக்கைகொள்வது தகுதியன்றும். அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை சுப்பிரீங்கோட்டார் காங்கேசன்றுறையிற் கப்பலேறிக் கொழும்பிராசதானி நோக்கினர்.

சர்வகலாசாலை.—Cal. U. Examinations.—கற்குத்தாச் சர்வகலாசாலையின் வீ. ஏ, எவ். ஏ. பரீட்சைகள் சென்றவாரத்திலும் இவ்வாரத்திலும சுண்டிக்குளியில் நடத்தப்பட்டன. இவற்றில் வீ ஏ பரீட்சைக்குச் சென்றோர், யாழ்ப்பாணக்கல்லூரியிலிருந்து ௪

உபாத்திமார் ௨

எவ். ஏ. பரீட்சைக்குச் சென்றோர்

யாழ்ப்பாணக்கல்லூரியிலிருந்து ௧௫

இந்துகல்லூரியிலிருந்து ௮

சேன் யோன்ஸ கல்லூரியிலிருந்து ௩

உபாத்திமார் ௨

வீ. ஏ., எவ். ஏ. பிரவேசப்பரீட்சைகளின் முடிபுகள் சித்திரைக் கடைசிவரையில் வெளியாகும்.

நெடுந்தீவு மணியம்.—Delft Maniagar.—நெடுந்தீவின்மணியவேலை தெற்குராலியில் முன் அயிட்டிங் உடையார்வேலைபார்த்தவரும் தீவுப்பகுதி மணியகாரனுக்கு இனத்தவருமான மேஸ். வயித்தியநாதர்க்காயிற்று.

தெ. போ. வித்தியாசாலைச்சிரேட்டஆசிரியர்.—Mr. S. S. Jeremiah's Successor.—காலஞ்சென்றுபோன மேஸ. ஜெரிமயாவினிடத்தை நிரப்புவார் யாரோவென வினவுவார் பலர். போதனுசாலையைத் தம் இரு நேத்திரமென மதிக்குமதன் தலைவர், யாழ்ப்பாணத்திற் பெருநன்மைவிளைத்த விக்களகத்தின் சமய அறிவு, சாஸ்திரஅறிவு குன்றாது நடத்துந் திறனுடைய ஒருவரை நியோசிப்பாரென்பதில் ஐயங்கொள்வார் யார்? புங்குடுதீவிற் போதகவூழியம் நடாத்தும் கனம். சாமுவேல் வீரசுத்திப்பிள்ளையைப் போதகரிற் கண்வைத்தனரென அறிந்தோம். சுவிசேஷ சங்கத்திற்குப் பெருநட்டமாயினும் போதனுசாலைக்கிவர் நியமனம் மிக வாய்ப்பென நினைக்கின்றோம். இவர் போதனுசாலையிற் கற்றரங்கேறி, வேதசாஸ்திரம் படித்து, பின் போதனுசாலை யாசிரியருளொருவராய் உபாத்திமார் பரீட்சைகடந்து தராதலப்பத்திரம்பெற்று அப்பால் நவாலிச்

சபைப்போதகராய் அபிஷேகம்பெற்று இப்பொழுது தீவுப் பகுதிகளிற் சுவிசேஷசங்கப் போதகராய் விளங்குபவர். போதனாசாலைக்குத் தகுந்த குரவர்.

மேஸ். கமறன்.—Mr. H. E. Cameron.—எட்டாந்திகதி துவக்கம் ஏசண்டுவேலை, டிஸதிறிக் நீதவான்வேலையிரண்டையும் தாமே பார்த்துவருகின்றார். கச்சேரிப் பழைய தோட்டத்தில் வசித்துக் காலையிற் கோட்டுவேலைக்கும் சாயங்தரத்திற் கச்சேரிவேலைக்குஞ் செல்கின்றனர். தோற்றத்தில் வயதுசென்றவர்போற் காணப்பட்டும், தலைவரிப்பணக் கழிவுசெய்தற்காய் அங்குமிங்கும் ஒற்றையாழிரதாருடராய் அம்புபோற் பறக்ககண்டோம்.

உத்தியோக மாற்றம்.—Change of Offices.—யாழ்ப்பாண அலுப்பாந்தித் தலைமைத் கிளாக் மேஸ். திசைவீரசிங்கம் காலி அலுப்பாந்தித் தலைமைக்கிளாக்காக, அங்கிருக்கும் டியூற்றிறம் என்பவர் யாழ்ப்பாண அலுப்பாந்தி ரேகுத்துறைபாயினர்.

நெடுந்தீவுக்கோடு.—Delft Cases.—வழமைபோல் நெடுந்தீவின்வழக்கு விசாரணை செய்வதற்காய் ஊர்காவற்றுறை நீதவான் கு. கதிரவேற்பிள்ளையவர்கள் இன்று தோணியேறினர்.

கனம். சிமித் ஐயர்.-Rev. T. S. Smith & Family கனம். சிமித் ஐயரவர்களும் சமுசார சகிதராய்ச் சுகஸ்தானமாம் பழனிமலை நோக்குகின்றனர்.

மேஸ். பாட்லேற்.—The Late Mr. Bartlett.—நெடுங்காலமாய்ச் சேட்சுமிஷன் தேவஊழியத்தமர்ந்திருந்த இவரும் மூந்தைநாள் நிரியாணமாயினரென்னுந்துக்கசங்கதி கேள்வியுற்றேம். இவர் சிறந்த புத்ர புத்திரிகள் பௌத்திர பௌத்திரிகளுள்ளவோர் பாரித்த குடும்பபதி. இவரது முதற்றூரப் புத்திரன யாழ்ப்பாணம் விவாக, செனன, மரண லேககர் தானியேல் பாட்லற்றும் முன் யாட்ப்பாணக்கல்லூரியிலும் பின் றிச்மன்கல்லூரியிலும் ஆசிரியராயிருந்திப்போது அரசாட்சி தளவைப்பகுதியில் வேலையாயிருக்கும் பிரதிக்தாரப் புத்திரன் சம்பிரோசா பாட்லற்றும் மாரேநம் பலரா லறியப்பட்டு விளங்குகின்றனர். மரணம் யார்க்கும் சரியே. இறந்தோர் உத்தமமும் உண்மையுமுள்ள கர்த்தரினூழியக்காரனுயிருந்தாரென்பது பலர்சொரிக்குஞ் சாட்சி. கர்த்தருக்குள் மரிப்போர் பாக்கியவான்கள். இறந்தாரிக பந்துக்களோடு யாமுமனுதாபப்படுகின்றேம்.

## இலங்கை.

பகிரங்கவேலைப்பகுதி.—P. W. D. டிஸ்திறிக்இஞ்சினீர்மார் சிலாகதம நில னையோப்பத்தோடு பகிரங்கவேலைப்பகுதியிலிருந்து பெருந்தொகைப்பணத்தைக் கள்ளக்கணக்குப்பூட்டி வாரிக்கொண்டு ஊர்க்கோடிப்போனமசாணஇஞ்சனீர் ஆலிவைப்பற்றிய விளக்கத்தில், யாம் கையெழுத்துப் போட்டிலமென மறுத்த டிஸதிறிக் இஞ்சினீர்மார் கிளாக்குமார் தப்பிவிட, எம் முதலாளி ஆலியின் கட்டளைக்கமைந்து கையொப்பமிட்டோமெனக் கூறிய டிஸ்றிக் இஞ்சினீர் மேஸ். சண்முகமும், வலைப்பகிரங்கவேலைக் கந்தோரின் முதற்கிளாக் மேஸ் தம்புவும் உத்தியோகத்தால் நிறுத்தப்பட்டனர். ஆலிக்குப் பைத்தியமென வைத்தியர் சாட்சிப்பத்ரமனுப்பப்பட்டது. இலங்கையிலிருந்த அவரது ஆஸதிகளும் பணங்களும் அரசாட்சியரால் நிறுப்பாக்கப்பட்டன.

பகிரங்க வேலைப்பகுதித் தலைவர்.—The Director of P. W. D.—உத்தியோகத்தாலிளைப்பாறுந் தௌரவ மெக்பிறைட்டின்டத்திற் கொங்கோங்கின் பகிரங்க வேலைத்தலைவர் மேஸ். எவ். ஏ. கூப்பர் நியமனமாயினர். இவர் சித்திரைக் கடைசி அல்லது வைகாசி முதலிற் தம்முத்தியோகங் கைபேற்பர். இப்போது பிரதியாளாய் வேலைபார்க்கும் மேஸ். ஓம்ஸ்பி. கொங்கோங்கு அல்லது நெடுவாய் ரோச்சியத்தின் பகிரங்கவேலைப்பகுதித் தலைவராவராம்.

லேடி கோடன்.—The Lady Gordon.—மட்டக்களப்புக்கரையில் மணல்மேற்பொறுத்த இப் புகைக்கப்பலிலிருந்த அரிசிச்சாக்குகளை யிறக்கி லேடி அவலக் கப்பலைச்சொண்டிழுப்பித்தும் முடியவில்லை பின் திருக்கோணமலையிலிருந்து "போனவேஞ்சர்" என்னும் போர்க்கப்பலை அவ்விடத்திற்குக் கொண்டுபோய்ச் சங்கிலிகளிற்றொடுத்திழுத்தபோது பலமுறையாய் அவைகள் சின்னபின்னப்பட்டன அப்பால் லேடி அவலக் திருக்கோணமலை சென்று பெரும் அர்மாறுகள் தாங்கி மட்டக்களப்பு நோக்கிற்று. யாதோர் நட்டமுமின்றி லேடிகோடனை மணல் மேட்டிலிருந்திழுத்துக்கொள்வது சந்தேகமாம்.

கொலை! கொலை!—Murder.—சிங்களவர்க்கு வாசஸ்தானமாகக்கொண்ட மேல், தென், மத்திய, ஊவா வாதியாம் மாகாணங்களில் நடைபெறுங் கொலைகள் அளவிறந்தன. சிறிதுநாட்களின்முன் சலாபத்திலும் பின் நீர்கொழும்பிலும் கொலை! கொலை! என்னுங் கர்ணகடூர வாக்கியங்கள் தந்திமூலமாக அரசினர்க்கு அறிவிக்கப்பட்டன. இப்போது ஒருவாரத்துக்குள் மாத்துறையில் மூவர் கொல்லப்பட்டார்களென்னுஞ் சங்கதி வரப்பெற்றது. நேற்றையத்தினம் மாத்துறையைச்சார்ந்த திப்பொட்டுவாவ என்னுங் கிராமத்தில் இரு வீட்டுக்காரருக்கிடையிற் சலிபிலிடக்கும்போது கோபமே குடிகொண்ட பாதகர் எவரோ பச்சைப்பாலகனென்று கொஞ்சமேனும் இரக்கமுறாது, கண்ணயர்ந்து தூக்கத்திற் கிடந்த ௧0 மாதச்குழந்தையைக் குத்திக் கொலைசெய்துவிட்டார்களாம். ஐயோ பரிதாபம்!!

முன்

கொள்ளைநோய்க் காரியஸ்தர்.—The Special Commissioners.—இந் நோயைப்பற்றிய விபரங்களைப் பூரணமாயாராய்ந்து படித்துவரும்படி வம்பாய்க்கனுப்பப்பட்ட டக்தர் வேணுன்டோ, பிறைஸ் என்பவர்கள் கொழும்புவந்து சேர்ந்தனர் மேற்கிந்தியாவின் துறைமுகங்களிலிருந்து வரும் யாதோர் சாமானும் இலங்கையிலிறக்குமதி செய்யப்படாதெனப் பிரமாணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

